### கோயம்புத்தூர் விமான தளம்

* 246 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் விமான தளத்தை மேம்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, பெரிய விமானங்கள் அங்கே வருகின்ற வாய்ப்பு ஏற்படும் சமயத்தில் இறங்குவதற்கு இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது, எனவே அந்தக் குறைபாட்டைப் போக்க இந்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது வருகின்ற விமானங்களுக்குப் போதுமான தளம் என்றுதான் கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறப்பான கருத்துக்களைச் சொல்வார்களேயானால் நிச்சயமாக மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் உதகைக்கு ஏராளமான உல்லாசப் பயணிகள் வருவதால் அங்கே விமானதளம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேலம் தூத்துக்குடி விமான தளங்கள் கேட்கப்பட்டதே முடிவாகவில்லை. இவைகள் பூர்த்தியானபிறகு வேண்டுமானால் ஊட்டிக்குச் செல்லலாம்.

### *Railway facilities for Kanyakumari*

* 247 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to move the Union Government to secure proper railway links for the people of Kanyakumari ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை (நாகர்கோயில், கன்னியாகுமரி வழியாக) புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை சேர்க்கும்படி மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இரயில்வே போர்டு வந்து 3 ஆண்டுகளுக்குள் பூர்த்தியாகிவிடும் என்று குறிப்பிடப் படுகிறது. இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநில அரசு பல கட்டங்களில் வற்புறுத்தி வருகிறது. நாங்கள் வற்புறுத்துவது மட்டும் அல்ல. மத்திய சார்க்காரிடத்திலேயும் வற்புறுத்தினால் தான் விரைவில் நடத்த முடியும். சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த இரயில்வே அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Is this Government aware of the fact that the Planning Commission has given the green signal for this scheme and that they have pointed out that it will be included in the next budget ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு கருத்து எங்களுக்கும் தெரிந்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் தான் இந்தியாவிலேயே இரயில்வே தொடர்பு இல்லாமல் இருக்கும் ஜில்லா. ஆகவே, இதற்காக பிரையாரிட்டி கொடுத்து இந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று அக்கறை கொண்டிருப்பதாகவும் ஆனால் தமிழக அரசு அதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கவில்லை என்ற கருத்து கூறப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய பணியாகும். நம்முடைய பணியெல்லாம் லேண்ட் அக்குவிசிஷன் செய்து கொடுப்பதாகும். அக்குவிசிஷன் கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டிருந்தாலும் நாங்கள் வந்ததற்குப்பிறகு தான் இப்படி வற்புறுத்தி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சமீபத்தில் இரயில்வே அமைச்சரவர்கள் தெரிவித்ததாகச் சொல்லி பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியபடி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்தையும் மத்திய அரசாங்கம் தெரிவித்து இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அதாவது மாநில அரசு ரெகமண்ட் செய்திருக்கும் திட்டங்களில் இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லாம் கொடுத்து கதை முடிந்தபிறகு சொன்னால் என்ன பிரயோஜனம்.

### மணியாச்சி இரயில் நிலையத்துக்கு மறு பெயர்

* 248 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணியாச்சி இரயில்வே நிலையத்திற்கு தியாகி வாஞ்சிநாத ஐயர் நினைவாக அவர்